www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 2nd Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் Hindu Culture | Three Hours 10 min | 46 | T | I,II |
| | Gr -12 (2023) | | | |

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. "சதுர்மறை" என அழைக்கப்படுவது.
1) வேதம் 2) ஆகமம் 3) புராணம் 4) இதிகாசம் 5) திருமந்திரம்

02. முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம் பற்றி குறிப்பிடும் சிவாகம பாதம்.
1) சரியா பாதம் 2) கிரியாபாதம் 3) யோக பாதம்
4) ஞான பாதம் 5) சரியா பாதமும் யோக பாதமும்

03. இதிகாசம் இறுதி வடிவம் பெற்ற காலம்.
1) வேத காலம் 2) குப்தர் காலம் 3) சோழர் காலம்
4) மௌரியர் காலம் 5) நாயக்கர் காலம்

04. சூதர் ஓதிய மூவாறு தொல்கதை என்ற புராணக் கதை பற்றி குறிப்பிடும் புராணம்
1) பெரிய புராணம் 2) சூரிய புராணம் 3) கந்த புராணம்
4) பிரம புராணம் 5) அக்கினி புராணம்

05. சங்க காலத்தில் ஆரிய – திராவிட இணைப்பைக் காட்டும் வழிபாடு
1) சிவ வழிபாடு 2) கொற்றவை வழிபாடு 3) நடுகல் வழிபாடு
4) பாவை நோன்பு 5) முருக வழிபாடு

06. சிவனுக்குரிய ரதக் கோயிலாக அமைவது.
1) அருச்சுனன் ரதம் 2) வீம ரதம் 3) நகுல ரதம்
4) சகதேவ ரதம் 5) கணேஷ ரதம்

07. "இனமத பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து விஷ்ணு ஒருவரையே தஞ்சம்" எனக் கொண்டு வாழ்ந்தவர்.
1) மீராபாய் 2) துளசிதாசர் 3) கபீர்தாஸர்
4) இராமானந்தர் 5) ஸ்ரீ சைதன்யர்

08. "பசியுள்ளவனுக்கு சமயப் போதனை ஆகாது" எனக் கூறியவர்
1) சுவாமி இராமகிருஷ்ணர் 2) சுவாமி விவேகானந்தர் 3) ஆறுமுக நாவலர்
4) தயானந்த சரஸ்வதி 5) ராஜாராம் மோகன் ராய்

09. "ஜயநு் கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்" பற்றி கூறும் கல்வெட்டு
1) பதவியா கல்வெட்டு 2) நிலாவெளி கல்வெட்டு 3) கந்தளாய் கல்வெட்டு
4) மிகிந்தலைக் கல்வெட்டு 5) குருநாகல் கல்வெட்டு

10. ஆரியச் சக்கரவர்த்திகள் தங்கள் இன சின்னமாகக் எதனைப் பயன்கடுத்தினார்கள்.
1) வேல் 2) மயில் 3) நந்தி 4) புலி 5) சிங்கம்

11. "கிறிஸ்தவ கண்டன குடாரி" என்ற சிறப்புப் பெயரை பெற்றவர்
1) ஆறுமுக நாவலர் 2) அருணாசல தேசிகர் 3) சுவாமி விபுலானந்தர்
4) கைலாசநாதக் குருக்கள் 5) காசிவாசி செந்தி நாதையர்



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. தாச மார்க்கத்தில் நின்று சிவனைப் போற்றியவர்.
    1) சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர்
    4) மாணிக்கவாசகர் 5) ஆளுடைய பிள்ளை

13. மாதோட்ட நகரத்து நிலத்தை திருக்கேதீஸ்வரத்துக்கு தானமாக வழங்கிய வன்
    1) தாழிக்குமாரன் 2) குளக்கோட்டன் 3) பன்மகேஸ்வரர்
    4) விக்கிரபாகு 5) பராக்கிரமபாகு

14. "அண்ணல் அருளில் அருளும் சிவாகமம்………" என பாடியவர்
    1) மாணிக்கவாசகர் 2) சேக்கிழார் 3) திருஞான சம்பந்தர்
    4) திருமூலர் 5) சேந்தனார்

15. பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் என்பனபற்றிக் கூறும் புராணம்
    1) ஸ்கந்த புராணம் 2) பெரிய புராணம் 3) கந்த புராணம்
    4) அக்கினி புராணம் 5) கருட புராணம்

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A** இந்தியாவின் புதுயுகத் தந்தை | **F** பிராமணம் | **K** கஞ்சித் தொட்டித் தருமம் | **P** யோகம் |
| **B** பிரமதேயம் | **G** திருத்தொண்டர் தொகை | **L** சங்கிதை | **Q** பெண்களுக்கான கல்வி |
| **C** கந்த புராண வசனம் | **H** ஆத்மீக சபை உருவாக்கல் | **M** சக மார்க்கம் | **R** ஆரணியகம் |
| **D** 7ம் திருமுறை | **I** அக்கிரகாரங்கள் | **N** பெண்ணுரிமையைப் பாதுகாத்தல் | **S** பிராகிருத மொழி |
| **E** உபநிடதம் | **J** 5ம் குரவர் | **O** கடிகை ஸ்தானம் | **T** சமூக சமத்துவம் |

16. ராஜராம் மோகன் ராய் அவர்களுடன் தொடர்புடைய தொகுதி
    1) A, H, N, T 2) B, G, N, S 3) C, H, O, T 4) D, I, M, Q 5) E, J, L, R

17. வேதங்களோடு தொடர்புடைய தொகுதி
    1) E, F, O, S 2) A, G, M, T 3) E, F, L, R 4) A, I, O, R 5) C, I, L, S

18. பல்லவர் காலத்தோடு தொடர்புடைய தொகுதி
    1) C, H, N, P 2) B, I, O, S 3) E, H, L, R 4) C, G, O, T 5) B, F, L, T

19. ஆறுமுக நாவலருடன் தொடர்புடைய தொகுதி
    1) D, G, L, R 2) C, I, M, S 3) A, I, N, T 4) E, F, O, T 5) C, J, K, Q

20. திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மீது பாடல் பாடியரோடு தொடர்புடைய தொகுதி
    1) B, J, K, Q 2) D, I, N, S 3) A, F, O, R 4) D, G, M, P 5) C, H, L, P



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.***

21. இந்து நாகரிகத்தின் சிறப்பு
   1) முக்தி தத்துவத்தை இலக்காகக் கொண்டது.
   2) இறை உண்மையை ஏற்று வாழ்தல்.
   3) உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு.
   4) இறை ஆற்றலை விட மானுட ஆற்றலே மேலானது.
   5) தர்மத்தை வாழ்க்கை விதிகளாக கூறுகின்றமை.

22. கைலாசநாதக் குருக்கள்
   1) 1921 ஆம் ஆண்டு பிறந்தார்.
   2) மட்டக்களப்பில் பிறந்தார்.
   3) இந்து சமய பாட ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்தார்.
   4) வாழ்நாட் பேராசிரியர்.
   5) கலாநிதி என்ற கௌரவ பட்டத்தினைப் பெற்றவர்.

23. வேதம்
   1) அறிவு என்னும் பொருளைத் தரும்.
   2) கி.மு 1500 – கி.மு 600 வரையிலான காலப்பகுதியாகும்.
   3) வியாசர் தொகுத்தார்.
   4) மூன்று காண்டங்களைக் கொண்டது.
   5) உபநிடதம் கர்ம காண்டப்பகுதியாகும்.

24. சோழர் காலம்
   1) நந்திக் கொடி சமய சின்னமானது.
   2) நடராச சின்னம் சோழ அரசர்களின் சின்னமானது.
   3) வேத விருத்தி, புராண விருத்தி முதலியவற்றுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன.
   4) அளவைக் கருவிகளில் நந்தி பொறிக்கப்பட்டது.
   5) ஆழ்வார் மரபு ஆச்சாரியார் மரபாக வளர்ச்சி கண்டது.

25. ஜனநாதமங்களம்
   1) 16 இந்துக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டது.
   2) ராஜராஜன் சதுர்வேதி மங்கலம் சிறப்படைந்தது.
   3) குளக்கோட்டன் திருகோணேஸ்வரத்தினை புனருத்தாமை செய்தான்.
   4) கதிர்காம முருகனை துட்டகைமுனு வழிபட்டான்
   5) 05 விஷ்ணு கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

(25 x 4 =100 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் இருபது புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

01. **சிவாகமங்கள் இந்துப் பண்பாட்டில் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் விளக்குக.**
    அ) வழிபாட்டு முறைகள்
    ஆ) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்
    இ) தத்துவ சிந்தனைகள்
    ஈ) சிறப்புக்கள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

02. **தென்னக வரலாற்றில் பல்லவர் காலம் ஏற்படுத்திய செல்வாக்குகளை மேல்வரும் விடயங்களில் விளக்குக.**
    அ) அரச சமூக சூழ் நிலை
    ஆ) மன்னர்களின் பங்கும் பணியும்
    இ) நாயன்மார்களின் பங்களிப்பு
    ஈ) திருக்கோயில்களின் வளர்ச்சி

(5+5+5+5=20 புள்ளிகள்)

03. **இந்துப் பண்பாட்டினை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.**
    அ) பஞ்ச இலட்சணங்கள்
    ஆ) புராணங்களின் வகை
    இ) வழிபாட்டு முறைகள்
    ஈ) தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. **ஈழத்து இந்து சமய வரலாற்றில் அநுராதபுரக் காலம் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் விளக்குக.**
    அ) மன்னர்களும் இந்து சமயத் தொடர்பும்
    ஆ) வழிபடப்பட்ட தெய்வங்கள்

(10+10=20 புள்ளிகள்)

05. **சுவாமி விபுலானந்தர் இந்து சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் தொடர்பாக மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.**
    அ) சமயப் பணிகள்
    ஆ) கல்விப் பணிகள்

(10+10 = 20 புள்ளிகள்)

06. "ராஜாராம் மோகன் ராய் பிரமசமாஜத்தின் மூலம் இந்து சமூகத்தினை வளம்படுத்திய பெருமைக்குரியவர்" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. வட நாட்டு வைணவ பக்தி நெறியாளரான மீராபாயின் பங்களிப்பை விளக்குக.

(20 புள்ளிகள்)

08. இந்து சமூதாயத்தில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!